//அவசரம்// //தனிகவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 3164 /அ1/2022 நாள்: 04.02.2023

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி–பயிற்சி –பவானி சாகர்,அரசு அலுவலர் பயிற்சி நிலையம் மூலம் இளநிலை உதவியாளர் /உதவியாளர்களுக்கு அடிப்படை பயிற்சி நடத்துதல் –31.12.2022 நிலவரப்படி பயிற்சி பெற வேண்டிய நிலையில் உள்ள பணியாளர்களின் பட்டியல் அனுப்பக் கோருதல் –சார்பு

பார்வை : தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக இணைஇயக்குநரின் (பணியாளர் தொகுதி) செ.மு.ந.க.எண்.5025 /அ 4/இ4/2023 நாள் 03.02.2023

===============

பார்வையில் காணும்செயல்முறைகளின் படி பள்ளிக்கல்வித்துறையில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்/உதவியாளர்களில் (நேரடி நியமனம் மூலம் உதவியாளராக நியமனம் பெற்றவர்கள் உட்பட) பவானி சாகர் அடிப்படை பயிற்சி பெற வேண்டி நிலுவையில் உள்ள பணிவரன் முறை செய்யப்பட இளநிலை உதவியாளர்கள் (நேரடி நியமனம் உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்ற உதவியாளர்களின் பெயர் பட்டியல் (படிவம் –1 ) –ல் இளநிலை உதவியாளர்களுக்கு நியமன அலுவலர் முதன்மைக் கல்வி அலுவலர் என்ற நிலையில் பணி நியமனம் பெற்று இதுநாள் வரை பணிவரன் முறை செய்யப்படாத பணியாளர்கள் மற்றும் நேரடி நியமன உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படாமல் நிலுவையில் உள்ள பணியாளர்கள் விவரம் (படிவம் –2)–ல் மற்றும் 53 வயது கடந்து விட்டமையால் பவானி சாகர் அடிப்படையில் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்கு கோரும் பணியாளர்கள் /மாற்றுத்திறனாளிகள் (படிவம்–3)–லும் ஆகியோரின் விவரங்களை இணைப்பில் காணும் Google Sheet –ல் பதிவுகள் மேற்கொண்டு எவரின் பெயரும் விடுபடாமல் உரிய படிவங்களில் Uni –Code Marutham Font –ல் பதிவேற்றம் செய்யுமாறும் வேலூர் மாவட்ட ஆய்வு அலுவலர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் கையொப்பமிட்ட ஒரு பிரதி தனிநபர் மூலம் 06.02.2023 மதியம் 12.00 மணிக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக அ1 பிரிவில் தனிநபர் மூலம் ஒப்படைக்குமாறு ஆய்வு அலுவலர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் .

எனவே மேற்கூறிய விவரங்களை காலம் தாழ்த்தாமல் 06.02.2023க்குள் பதிவுகள் மேற்கொண்டும் , மேலும் பவானி சாகர் பயிற்சிக்குத் தகுதியுள்ள பணியாளர்களைப் பரிந்துரை செய்யாத அலுவலர்களின் /தலைமை ஆசிரியர்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள

நேரிடும் என்பதுடன் ,இதற்கு முழுப்பொறுப்பும் சார்ந்த ஆய்வு அலுவலர்கள் மற்றும் தலைமை ஆசிரியரையே சாரும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு:

1. படிவம் 1,2,3
2. Google Forms Link

ஒப்பம்.க.முனுசாமி
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்

பெறுநர்:

1. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி வேலூர் மாவட்டம்.
2. மாவட்ட கல்வி அலுவலர்( இடைநிலை /தனியார்பள்ளிகள்/தொடக்கக்கல்வி) வேலூர் மாவட்டம்.
3. அரசு /நகரவை /உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் வேலூர் மாவட்டம்.
4. வட்டாரக்கல்வி அலுவலர்கள் (வேலூர் /கணியம்பாடி /அணைக்கட்டு/காட்பாடி /குடியாத்தம்/பேர்ணாம்பட்டு/ கே.வி.குப்பம்)